01.09.2025

OS No: 319/2017 r/w OS No.140/2018

பி. வா.சா. 1 திரு. விஜயா க/பெ முருகையா

**OS No.319/2017 வழக்கின் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி மாணிக்கம் எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். பிரதிவாதி தவிர மேலும் 3 சகோதரிகள் எனது உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதி உதவி ஆய்வாளராக காவல் துறையில் பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி தனது பணிக்காலத்தில் பல்வேறு ஊர்களில் பணி புரிந்துள்ளார் என்றால் சரிதான். என்னை தாவா சொத்து அமைந்துள்ள கண்டாங்கிபட்டி கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது கணவருக்கு சொந்த ஊர் கண்டாங்கிபட்டி என்றால் சரிதான். கண்டாங்கிபட்டியில் தான் எனது கணவருக்கு சொந்தமாக வீடு, நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எனது கணவருக்கு சொந்தமான வீட்டில் தான் நானும் எனது பிள்ளைகளும் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல தோட்டத்தில் இருக்கிறோம். எனது கணவர் வீட்டில் எனக்கு திருமணம் ஆன முதல் எவ்வளவு வருடங்கள் அங்கு இருந்தோம் என்றால் 25 வருடங்கள் இருந்தோம். மேற்படி வீட்டின் கதவு எண். 385, கீழத்தெரு என்றால் சரிதான். மேற்படி வீட்டில் தான் ஓட்டு போடுவது முதல் ரேசன் சாமான் பெறுவது வரை இருந்து வந்ததோம் என்றால் சரிதான். எனக்கு எந்த வருடம் திருமணம் ஆனது என்றால் 1980ம் வருடத்தில் ஆனது. எனது திருமணத்தின் போது எனது அப்பா இருந்தாரா என்றால் அம்மாவும், அப்பாவும் இருந்தார்கள். எனது அப்பாவிற்கு சுமாராக எனது திருமணத்தின் போது என்ன வயது இருக்கும் என்றால் தெரியவில்லை அவர் TVSல் அந்த காலத்தில் பணி புரிந்து வந்தார். மேற்படி எனது தந்தை TVS நிறுவனத்தில் வேலை பார்த்தார் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் மேற்படி நிறுவனத்தில் வேலை பார்த்தார் என்ற சங்கதி உண்மை ஆகும். மேற்படி எனது தந்தை TVS ல் எப்போது வேலை பார்த்தார், எப்போது ஓய்வு பெற்றார் என்ற விவரங்கள் மேற்படி ஆவணங்களை பார்த்தால்

தெரியவரும் என்றால் சரிதான். தாவா வழக்கு எத்தனை சொத்துக்களுக்கு போட்டுள்ளேன் என்றால் 1 சொத்திற்கு போட்டுள்ளேன். மேற்படி சொத்திற்கு விஸ்தீரணம், சர்வே எண் தெரியுமா என்றால் அளவு 2 1/2 ஏக்கர் ஆகும் சர்வே எண் தெரியாது பட்டா எண் தெரியும். மேற்படி இடமானது எந்த வகையானது என்றால் புஞ்சை நிலம் ஆகும். மேற்படி சொத்தில் வீடு ஒன்றும் கிணறு ஒன்றும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடானது பிரதிவாதி மாணிக்கம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது பெயருக்கு மாற்ற வேண்டும். மேற்படி வீட்டிற்கு வரி விதிப்பு யாருடைய பெயரில் உள்ளது என்றால் பிரதிவாதி மாணிக்கம் பெயரில் உள்ளது. வரி நான் தான் கட்டி வருகிறேன். தற்போது தான் பிரதிவாதி பெயரில் வீட்டு வரி உள்ள விவரம் தெரியும். மேற்படி தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கான கதவு எண் என்ன என்றால் 305 என நினைக்கிறேன் நியாபகம் இல்லை. மேற்படி வீடு என்ன மாதிரியான வீடு என்றால் செண்ட்ரிங் வீடு ஆகும். மேற்படி வீடு கட்டி எத்தனை வருடங்கள் ஆகும் என்றால் 25 வருடங்களுக்கு மேல் இருக்கும். மேற்படி தாவா சொத்தில் உள்ள வீடும், அதை சுற்றி உள்ள இடமும் பிரதிவாதி மாணிக்கம் பெயருக்கு கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். எனது அம்மா அப்பா வாங்கிய இடம் ஆகும். மேற்படி இடமானது எனது அம்மா அப்பா எப்போது வாங்கினார்கள், எவ்வளவு தொகைக்கு வாங்கினார்கள் என்றும் அவர்கள் பெயரில் தான் கிரையம் வாங்கினார்களா என்றால் அது பற்றி தெரியாது 1975 ம் வருடம் கிரையம் வாங்கப்பட்டது. 1975ம் வருடம் பிரதிவாதி பெயிரில் கிரைய வாங்கியதாக சொல்வது பதிவு கிரையமா என்றால் பதிவு கிரையம் தான் அதன் பிறகு எனது பெயருக்கு மாற்றி கொடுத்துவிட்டார்கள். மேற்படி கிரைய சமயத்தில் பிரதிவாதி TVS ல் பணி புரிந்தார் என்றால் இல்லை போலீஸில் வேலை பார்த்தார். தாவாசொத்து எனக்கு பாத்தியமான சொத்து என்பதாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து எந்த வகையில் எனக்கு பாத்தியம் என நான் சொல்கிறேன் என்றால் எனது அம்மா, அப்பா சீதனமாக எனக்கு கொடுத்த சொத்து என்பதால் அவ்வாறு

சொல்கிறேன். எனது பிராதில் தாவா சொத்தை எனக்கு சீதன பாத்தியம் என்று மட்டும் சொல்யுள்ளேனா அல்லது வேறு பாத்தியம் என சொல்லியுள்ளேனா என்றால் சீதன பாத்தியம் என்று சொல்லியுள்ளேன். தாவா சொத்தானது பிரதிவாதி மாணிக்கம் பெயரில் கிரையம் ஏற்பட்டிருந்த நிலையில் எனது அப்பா , அம்மா எனது பெயருக்கு சீதனமாக எப்படி தாவா சொத்தை மாற்றி கொடுக்க முடியும் என்றால் எனது அப்பா, அம்மா எனது அண்ணான பிரதிவாதியிடம் சொல்லி தாவா சொத்தை எனது பெயருக்கு மாற்றி கொடுக்க சொன்னார்கள். எனது அப்பா அம்மா சொன்னதின் அடிப்படையில் பிரதிவாதி மாணிக்கம் தாவா சொத்தை எனது பெயருக்கு எழுதி கொடுத்துள்ளாரா என்றால் பத்திரம் எழுதி கொடுக்கவில்லை பட்டா எனது பெயருக்கு மாற்றி கொடுத்தார். எந்த வருடம் எனக்கு தாவா சொத்தை சீதனமாகவும், பட்டா மாற்றியும் கொடுத்தார்கள் என்றால் எனக்கு திருமணம் முடிந்த 1980 ம் காலத்தில் இருந்து 2, 3 வருடங்கள் கழித்து மாற்றி கொடுத்தார்கள். எனக்கு சீதனமாக தாவா சொத்தை கொடுத்த விவரம் எனது அக்கா, தங்கைக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விவரத்தை எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்து எனக்கு சீதனமாக கொடுக்கப்பட்டதாக சொல்வதற்கு எழுத்து பூர்வ ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனது சாட்சியத்திற்கு மாறாக தாவா சொத்தின் பாத்தியம் குறித்து வேறு விவரம் பிராதில் குறிப்பிட்டிருந்தால் அது தவறானது என்றால் சரியல்ல. எனது பிராதில் தாவா சொத்தானது எனக்கு சீதனத்தின் அடிப்படையில் மட்டுமே பாத்தியம் என்றும் வேறு வகையில் பாத்தியம் எதுவும் இல்லை என சொல்லியதாக சொல்வது சரிதானா என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு சீதனமாக கிடைத்து என சொல்வது உண்மை அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எனது பெயரில் தவறுதலா பட்டாவை பிரதிவாதிக்கு தெரியாமல் நானே மாற்றி கொண்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியம் இல்லை என்றும் தாவா சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கேட்டிடவும் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து கிரையம் பெற

எனது அப்பா எவ்வளவு பணம் கொடுத்தார் என்றால் தெரியாது. எனது அப்பா பணம் கொடுத்ததாக சொல்வதற்கு எழுத்து மூல ஆதரவு இல்லை என்றால் சரிதான். எனது அப்பா பணம் கொடுத்து அதன் பெயரில் பிரதிவாதி பெயருக்கு தாவா சொத்து கிரையம் வாங்கப்பட்டதாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது திருமணத்திற்கு வேண்டி பொருட்களை பிரதிவாதி கொடுத்து விட்டார் என்றும் சீதனமாக தாவா சொத்து எனக்கு கொடுக்கப்ட்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி காவல் துறையில் இருந்து 2012ம் வருடம் ஓய்வு பெற்று விட்டார் என்றால் அது பற்றி தெரியாது. 1972 முதல் 1979 வரை பிரதிவாதி மாணிக்கம் TVS நிறுவனத்தில் வேலை பார்த்தார் என்றால் சரியல்ல. TVS நிறுவனம் மற்றும் போலீஸில் பிரதிவாதி வேலை பார்த்து சுயமாக சம்பாத்தித்தார் என்றால் போலீஸில் வேலை பார்த்து சம்பாதித்தார். பிரதிவாதி தனக்கான வருமானத்தை கொண்டு அவரது குடும்பமான எங்கள் அணைவரையும் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீடு கட்டுவதற்கு எவ்வளவு செலவு என்றால் நான் தான் சொத்தில் உள்ள வீட்டை கட்டினேன் 1 1/2 லட்சம் செலவு ஆனது. வீடு கட்டுவதற்கு 1 1/2 லட்சம் செலவு ஆனது என்பதை காட்டிட எழுத்து பூர்வ ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை உத்தேசமாக சொல்கிறேன். தாவா சொத்தானது பிரதிவாதி பெயருக்கு கிரையம் ஏற்பட்ட பின்பு பிரதிவாதி பெயரில் பட்டா எண்.584 ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள வீட்டில் பிரதிவாதியின் மனைவி பெயரான ராஜேஸ்ரி என்பவது கல்வெட்டில் எழுதி பதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது மேற்படி கல்வெட்டு இருக்கிறாதா அல்லது இல்லையா என்பது குறித்து நேரில் பார்த்தால் தெரிய வரும் என்றால் தற்போது கல்வெட்டு உள்ளதா என்பது குறித்து எனக்கு தெரியாது. மேற்படி வீடானது கட்டியதில் இருந்து பிரதிவாதியின் மனைவி பெயரான ராஜேஸ்வரி கல்வெட்டில் வைக்கப்பட்டு 30 வருடங்களுக்கு மேல் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா வீட்டை கட்டிய பிறகு கிரகபிரவேசம் பிரதிவாதி செய்தார் என்றால் சும்மா

பால் காய்ச்சினார். (சாட்சி தற்போது எல்லோரும், அம்மா, அப்பா, தங்கச்சி, அக்கா சேர்ந்து பால் காச்சியதாக சொல்கிறார். ) தாவா சொத்து அதில் உள்ள வீடு பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சுயார்ஜித பாத்தியமான சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வரி பிரதிவாதி தான் செலுத்தி வருகிறார் என்றும் நான் வரி செலுத்தியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உள்ளூரில் இருப்பதால் சில வருடங்களுக்கு வரி பணத்தை பிரதிவாதி என்னிடம் கொடுத்து கட்ட சொல்லியுள்ளார் அதன் பெயரில் தாவா சொத்திற்கு நான் வரி கட்டியதாக சாட்சயிம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கிணறு ஒன்று உள்ளதா என்றால் கிணறு உள்ளது அது ஜீவன்தாரா கிணறு ஆகும். மேற்படி கிணறு, வீடு தவிர மீதம் உள்ள இடங்களில் புளியமரம், தென்னை மரம், மா மரம், உள்ளது என்றால் நான் தான் அவற்றை வைத்தேன். மேற்படி மரங்களுக்கு கிணற்றில் இருந்து தான் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்றால் சரிதான். பக்கத்தில் உள்ள ஊரணியில் இருந்தும் தண்ணீர் எடுத்து வந்து பாய்ச்சுகிறேன். மேற்படி மரங்கள் வைத்ததாக சொல்வதும், அதற்கு நான் தண்ணீர் எடுத்து பாய்ச்சியதாக சொல்வதும் உண்மை அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கிணறானது பிரதிவாதி மாணிக்கம் தான் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கிணற்றுக்கு அருகே எனது அப்பா அம்மா பெயரில் கல்வெட்டு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பா அம்மா நினைவாக பிரதிவாதி கிணற்றுக்கு பக்கத்தில் கல்வெட்டு வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகைப்படமானது தாவா சொத்தில் பிரதிவாதி வீடு கட்டி கிரகபிரவேசம் நடத்திய போது எடுக்கப்பட்ட புகைப்படம் என்றும் அதில் பிதிவாதியும் அவரது மனைவியும் உள்ளனர் என்றால் சரிதான். வீடு பால் காய்ச்சும் போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஆகும். தாவா சொத்தில் பிரதிவாதிக்கு பாத்தியமும் அனுபவமும் உள்ளது என்றும் என்னிடம் தாவா சொத்திற்கான அனுபவமும் பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி காவல் துறையில் வேலை பார்த்த

போது எனது அப்பா அம்மா பிரதிவாதிக்ககா தாவா சொத்தினை பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல எனது அப்பா அம்மா பைக்கராவில் இருந்தார்கள் என்னையும் எனது குழந்தைகளையும் பார்த்து செல்வதற்காக எங்கள் ஊருக்கு வந்து செல்வார்கள். பிரிதிவாதி தாவா சொத்துக்களை பார்த்துக்கொள்ள என்னை சொன்னதின் அடிப்படையில் எனது அம்மா அப்பா இறப்பிற்கு பின்பு தாவா சொத்துக்களை நான் பார்த்து வந்தேன் என்றால் பிரதிவாதி சொல்லி நான் பார்க்கவில்லை எனது சொத்து அதனால் நான் பார்த்து வந்தேன். எனது சொத்து அதனை நான் பராமரித்து பார்த்து வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பணம் கொடுத்து தாவா சொத்திற்கு நான் வரி செலுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. என் மேல் நம்பிக்கை வைத்து வரி செலுத்த பணம் பிரதிவாதி கொடுத்ததின் பெயரில் வரி செலுத்திய நான் எனக்கு சாதகமாக பட்டாவை மாற்றி கொண்டேன் என்றால் சரியல்ல. பட்டாவை எனது பெயருக்கு மாற்ற பிரதிவாதி எழுத்து மூலமாக எழுதி கொடுத்துள்ளாரா என்றால் ஆபிசுக்கு வந்து பிரதிவாதி எழுதி கொடுத்ததின் பெயரில் தான் பட்டா எனது பெயருக்கு மாற்றப்பட்டது. எந்த ஆபிசில் பிரதிவாதி எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. பிரதிவாதி எழுதி கொடுத்ததாக சொல்லும் ஆவணத்தை தாவா வழக்கில் தாக்கல் செய்திட நடவடிக்கை எடுத்திட நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது பெயருக்கு பட்டா மாற்றப்பட்ட பிறகு அதன் விவரம் தெரிந்து மேற்படி பட்டாவை ரத்து செய்திட வருவாய் கோட்டாட்சியரிடம் பிரதிவாதி மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் நான் ஜெயித்து விட்டேன். மேற்படி வழக்கில் நான் ஜெயிக்க வில்லை என்றும் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் அங்கு சென்று பார்த்து கொள்ளுமாறு தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல.RDO-விடம் கொடுக்கப்பட்ட மனுவின் பெயரில் கிராம நிர்வாக அலுவலர் விசாரித்து அறிக்கை ஒன்றை கொடுத்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி கிராம நிர்வாக அலுவலர் தனது அறிக்கையில் தாவா சொத்தானது பிரதிவாதி

மாணிக்கத்தின் அனுபவத்தில் உள்ளதாக சொல்லியிருந்தார் என்றால் அப்படி சொல்லவில்லை. மேற்படி RDO வழங்கிய உத்தரவில் தாவா சொத்திற்கு எனது பெயரில் எவ்வித ஆவணமும் இல்லாமல் பட்டா கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது பெயரில் பட்டா உள்ளதை பயன்படுத்தி கிஸ்தி ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டது எனது பெயரிலான போலி பட்டாவின் அடிப்படையில் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கிணறானது பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்டது என்றும் அதை மறைத்து ஜீவன்தாரா திட்டத்தின் மூலம் கிணறு ஏற்படுத்தப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் கிணறு தோண்ட பிரதிவாதி சம்மதம் கொடுக்கவில்லை என்றும் பிரதிவாதி சம்மதம் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கிணறு தோண்டுவதற்கு எவ்வளவு பணம் அரசால் கொடுக்கப்பட்டது என்றால் நியாபகம் இல்லை. தாவா சொத்தை பொருத்து 2015ம் வருடத்தில் எனது மகன் பெயரில் கிரையம் ஒன்றை எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தில் எனது கணவர் ஒரு சாட்சி ஆவார் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் மற்றொறு சாட்சி யார் என்றால் எனது சொந்தக்காரரான மந்தக்காளை ஆவார். எனது பாதுகாப்பில் உள்ள சொத்தை எனது மகன் பெயருக்கு எழுதி வைக்க வேண்டிய அவசியம் என்ன என்றால் எனக்கு உடல் நிலைசரியில்லை என்பதால் சொத்தை பார்க்கவும் பராமரிக்கவும் எனது மகனுக்கு எழுதி கொடுத்தேன். தாவா சொத்தானது எங்களுக்கு பாத்தியம் என்பதை காட்டிட வேண்டி மோசடியாக ஏற்படுத்தப்பட்டது தான் எனது மகன் பெயரிலான கிரைய பத்திரம் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியம் இல்லை என்றும் தாவா சொத்தை எனது மகனுக்கு எழுதி கொடுக்க எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை எனது மகனுக்கு கிரையம் எழுதி கொடுத்து அதன் பெயரில் தாவா சொத்தானது எங்களது அனுபவத்திலும் பாத்தியத்திலும் இருப்பதாக சொல்வது சட்டப்படி செல்லாது என்றால்

சரியல்ல. தாவா சொத்தில் எனக்கே உரிமை இல்லாத போது எனது மகனுக்கு தாவா சொத்தில் உரிமை பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. எனது மகனுக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திர கிரைய தொகை நான் பெற்றுக்கொள்ளாமலையை கிரைய தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எவ்வளவு தொகை கிரையம் என்றால் எனது கணவருக்கு தான் தெரியும். கிரைய பத்திரத்தில் கண்ட தொகையை கொடுத்தாரா அல்லது அதற்கும் கூடுதலாக பணம் கொடுத்தாரா என்றால் தெரியாது. எனது மகனிடம் இருந்து எந்த காசும் நான் வாங்கிடவில்லை என்றால் சரிதான். எனது வீட்டுக்காரர் வாங்கினார். எனது வீட்டுக்காரரிடம் எனது மகன் கிரைய தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றும் மேற்படி கிரையமானது மோசடியான கிரையம் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தில் அனுபவத்தில் இல்லாத போது பிரதிவாதியின் அனுமதியில் பேரில் தாவா சொத்தை மேல்பாத்தியம் பார்த்தேன் என்றால் சரியல்ல. பட்டாவை எனது பெயருக்கு மாற்றி கொண்டது சம்மந்தமாக எனக்கும் எனது மகனுக்கும் எதிராக பிரதிவாதி குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி குற்ற வழக்கு சமீபத்தில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் குற்ற முறையிடுபவர் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்ற காரணத்திற்காக நாங்கள் விடுதலை செய்யப்பட்டோம் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்தை பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றும் அதற்கு நான் இடையூறு செய்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை நானும் எனது மகனும் தான் அனுபவித்து வருகிறோம். அவ்வாறு சொல்வது தவறு என்றால் சரியல்ல. மேற்படி RDO பிறப்பித்த உத்தரவின் பெயரில் DRO தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டிலும் சிவில் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் சிவில் நிதீமன்றம் செல்லுமாறு சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் 30.08.2017ம் தேதி தாவா சொத்தில் பிரதிவாதி அத்துமீறி நுழைந்ததாக

சொல்லப்பட்ட சங்கதியை பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 30.08.2017ம் தேதி தாவா சொத்தில் பிரதிவாதி அத்துமீறி நுழைந்ததாக சொல்வது குறித்து போலீஸில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்துதேன் பிரதிவாதியி செல்வாக்கால் புகார் எடுக்கவில்லை. புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. மேற்படி போலீசார் புகாரை எடுக்கவில்லை என்ற சங்கதியை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. எனது தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் பிரதிவாதி தரப்பு கட்சியை ஏற்றுக்கொண்டு பிரதிவாதி வழக்கை அனுமதிக்க வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக சீதனமாக தாவா சொத்து கொடுக்கப்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.09.01 17:24:29 +0530